297

உ

ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி

காவடி அபிஷேகமாலை.

ஆர். கோவிந்தசாமி நாயுடு

விருப்பத்தின்படி

ஷையார்காரியம்,

S.P. கிருஷ்ணசாமி ராஜா அவர்களால்

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை.] 1924 [அணா 2.

ரிஜிஸ்டர் காபிரைட்.

18 JUL 19

926:417
N24

உ

வேலுமயிலுந் துணை.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி காவடி அபிஷேகமாலை.

முருகக்கடவுள் சிறப்பு.

எல்லாத் தலங்களிலும் எம்மான் முருகனே
பொல்லா வினைநீக்கும் பூரணனும் - வல்லோர்
உரைத்ததுபோல் நானிலத்தில் உண்மைமகிமை
உரைக்கவே என்னுமுடியாதினி.

ஆடுமையிலேறி முருகையா	வாவா
அருமறைக்கும் எட்டாத அரனே	வாவா
திருப்புகழை கேட்ட செவியுடையா	வாவா
திருமுகமும் வெண்ணீறுந் துலங்க	வாவா
செஞ்சடையோன் தன்னுடைய செல்வா	வாவா
சேவல்கொடி தான்பரக்க சிவனே	வாவா
கொடிபோன்ற குறச்சிறுகுமரா	வாவா
கோதில்லா வளையல்விற்ற குகனே	வாவா
ஆறுபடை வீடமர்ந்த அய்யா	வாவா
அவதிப்படும் வேளைதனில் காக்க	வாவா
பிஞ்சுமதியுடையோனின் புதல்வா	வாவா
பிரியமுடன் காத்திடும் பெருமானே	வாவா
மூலமுதலாதார மூர்த்தியே	வாவா
முதுமறையோர் போற்றுகின்ற முதலே	வாவா
பரமரகச்யப்பொருளின் பாலா	வாவா
பன்னிருகை ஆண்டவனே பரிவாய்	வாவா
தேவர் திருக்கூட்டமிங்கிருக்கு	வாவா
தெரிசனங்கள் தந்திடவும் சிவனே	வாவா
அருணகிரிமேவுகின்ற வேலா	வாவா
அரகரா ஆறுமுகத்தய்யா	வாவா

இடும்பையன் போற்றிடவு மிறங்கி வாவா
ஏழைகளை காத்தருள யெழுந்து வாவா
ஆனந்தபரஞ்சுடரே அய்யா வாவா
அஞ்சலென்று ஆதரிக்க அருள்புரிய வாவா
திருச்சங்கோடுரைந்த சிவகுருவே வாவா
திருமூர்த்தி போற்றிடும் சிற்பரனே வாவா
ஆலால முண்டவனின் புதல்வா வாவா
அப்பனே புலியூரி லிருந்து வாவா
அம்பலத்திலாடும் சிவகுருவே வாவா
அருள்நிறைந்த பூரணனே அய்யா வாவா
கதிர்காமமிருந்து கந்தசுவாமி வாவா
கன்னிதிரு சூலியுட மைந்தா வாவா
கார்த்திகையில் கருணையுடனய்யா வாவா
கார்த்திருக்கார் கயிலைமலை அய்யா வாவா
மைந்தரெல்லாம் ஸ்தானமது செய்தோம் வாவா
மகிழ்ச்சியுடன் காவடிகட்டினமே வாவா
வெகுநேரமாகுதய்யா வேலா வாவா
வெற்றிவேலெடுத்த விமலனே வாவா
அருணகிரிமேவுகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத்தய்யா வாவா
எங்கள்மேல் குற்றமொன்றுமில்லை வாவா
எழிலாறுமுருகய்யா அய்யா வாவா
கொத்த குமைகொடி யருமைகுமாரா வாவா
குழந்தைகளு முன்னடிமை குகனே வாவா
எத்தேசகாலமுனை மறவேன் வாவா
என்னப்பா யென்குருவே இப்போ வாவா
உன்னைவிட தெய்வமில்லை உண்மை வாவா
ஒருவர்துணை இல்லை இதுவுருதி வாவா

பழநிமலை ஆண்டவனே பரனே வாவா
பன்னிருகை பரமகுருபரனே வாவா
திருச்செந்தூர் சேவகனே சிவனே வாவா
திருமயிலேறி வரும்சிவனே வாவா
கதிர் காமமிருந்து கந்தசாமி வாவா
கணபதிக்கு இளையமுருகய்யா வாவா
திருத்தணியை யமர்ந்த சிவகுருவே வாவா
திசைமுகனுக் கரியாத சிவனே வாவா
சுவாமிமலை சுப்பிரமண்ய சுவாமி வாவா
சுருதிமுடிக்கெட்டாத சுடரே வாவா
எட்டுகுடிவடிவலோ இப்போ வாவா
ஏழைமுகம் பார்க்க இதுசமயம் வாவா
சோலைமலைசுந்தரனே துணைவா வாவா
எதுர்த்த பிரணவமறிந்தோன்சுதனே வாவா
தண்ணிமலைவிட்டு தன்னிப்பொருளே வாவா
தற்பரனே சண்முகனே சுவாமி வாவா
குன்றைக்குடி மீதமர்ந்த குகனே வாவா
குழந்தைவடி வேலவனே குமாரா வாவா
வேளூரின் முருகய்யா விமலா வாவா
வித்தகனே வினைதீர்த்த அய்யா வாவா
அருணகிரி மேவுகன்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத்தய்யா வாவா

சரசமுருகனே சண்முகனேசுவாமி வாவா
சங்கரனின் மைந்தனே சற்குருவே வாவா
மரகதவேல்கைபிடித்த மணியே வாவா
மங்கை சிவகாமியின் மைந்தா வாவா
ஆறுமுகமான பொருளய்யா வாவா

அசுரர்களை வேரறுத்த அரனே வாவா
வேதமந்திர முரைத்த விமலா வாவா
வேல்முருகா இதுசமயமய்யா வாவா
குருநாதா குமாரகுருபரனே வாவா
கோதிலா வள்ளியுடன்கூடி வாவா
அமரர் சிறைமீட்ட ஆறுமுகனே வாவா
அடிமைகளை ஆதரிக்க அய்யா வாவா
அஷ்டகுல பருவதங்களாட வாவா
அடங்காத பூதகணம் சூழ வாவா
வேதாளம் காளிநடுங்கிடவே வாவா
வேலவனே யென்கவலை தீர்க்க வாவா
எழுகடலும் கலங்கிடவே யெழுந்து வாவா
ஏறுமயிலேறி விளையாட வாவா
சரவணப்பொய்கை தவழ்ந்தோனே வாவா
சரவண கமலாலயசண்முகனே வாவா
அருணகிரி மேவுகின்ற அரனே வாவா

அரகரா ஆறுமுகத்தையா வாவா
சிக்கல் புரவச் சேரியிருந்து வாவா
சிரித்து புரமெரித்தவன் புத்திரனே வாவா
சக்திவேலாயுதனே சண்முகனே வாவா
சற்குருவே சமயமிது ஜல்தி வாவா
பால் பழம் முக்கனியுடன் படைப்பேன் வாவா
பன்னீராலபிஷேகம் செய்வேன் வாவா
நறுமலரால் சூடுவேன் நாதா வாவா
நல்ல கனிவர்க்கம் வைத்தேன் நாடி வாவா
தூப தீபம் கொடுத்தேன் துரையே வாவா
தூயமறையோர் பணியும்சுவாமி வாவா

இல்லையோ தெய்வமதுயீசா வாவா
இருந்தாலுமிரங்கி இங்கு இப்போ வாவா
எப்போது முன்னடிமையெண்ணி வாவா
எங்களுட குறைதீர் எழுந்து வாவா
அப்பனே ஆறுமுக அய்யனே வாவா
அடியேனைக் காக்க முருகையா வாவா
அருணகிரி மேவுகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத் தய்யா வாவா

நித்தியகல்யாண சிவசுவாமி வாவா
நிரந்தரியின் பாலகனே நீயும் வாவா
சுத்தபரிபூரணனே சுவாமி வாவா
சூக்ஷ்ம மகாகாரணனே சுடரே வாவா
சதான்ந்த கற்பரனே சாமி வாவா
சர்வபரிபூரணனே சற்குருவே நீ வாவா
பூமிமுதலாடமயிலேறி வாவா
புண்ணியனே பூசுரர்கள் போற்ற வாவா
ஆண்டி சிவனாண்டி முருகாண்டி வாவா
ஆறுமுகத்தாண்டி அன்புடனே வாவா
எத்தனையோ காவடி வந்திருக்கு வாவா
எண்ணிச்சொல்ல முடியாதென்குருவே வாவா
கண்கொள்ளாக் காவடியின்காக்ஷி வாவா
கருணை குருநாத னிவைகாண வாவா
வெள்ளிரத காவடிகள்கோடி வாவா
வீதியினிலாடுது விரைவில் நீ வாவா
தங்கரதகாவடி வந்திருக்கு வாவா
தனிவான சன்னிதிக்கி வந்திருக்கு வாவா
மச்சக்காவடிகள் வந்திருக்க வாவா

மகிழ்ச்சியாய் கண்டு அருள்செய்ய வாவா
அருணகிரி மேவுகின்ற போதா வாவா
அரகரா ஆறுமுகத் தய்யா நீ வாவா

குமாரகுருபரனே முருகையா வேல்வேல்
குறத்திமணவாள முருகய்யனே நீ வாவா
சென்னிமலை வேளூரில்வாழும் வாவா
திருவருணை தனிலிருந்த செல்வா நீ வாவா
எங்கினும் போய்ச்சுற்றிவந்தேனிறைவா வாவா
எட்டிகுடி தனிற் கண்டேனிரங்கினே வாவா
பாதமதில் சிலம்பொலிக்கபரனே வாவா
பன்னிருகையுடைய பரமேசா நீ வாவா
பஞ்சவர்ண கிளிகள் கொஞ்சபரிவாய் வாவா
பாவைதெய்வானையுட பதியே வாவா
எத்தனையோ அலவுபூண்டிருக்கார் வாவா
எண்ணிரந்த காவடிகள் வந்ததைப்பார்க்க வாவா
இடும்பனவனெச்சரிகைகூற வாவா
இருபுரமும் காவடிவந்துயிரக்க வாவா
பச்சைமயிலேருகின்ற பாலா வாவா
பக்ஷம்வைத்து யென்வினையைத்தீர்க்க வாவா
அலவுமேல் காவடி நின்றாட வாவா
அறிமருகாதிருச்செந்தூ ரய்யா வாவா
கோலமயில் காவடிகள் கோடி வாவா
கொண்டுவந்திருக்கிறது குமரா வாவா
அருணகிரி மேவுகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத் தய்யா வாவா
கயிலாய பேருகிரி அய்யா வாவா

கருணைபெரு ஆனந்தமுதலே வாவா
வெயிலதிகம் சகிக்கமுடியாதே வாவா
விளையாடும் வேலவனேவிரைவாய் வாவா
கும்பமுனிதனக் கருள்செய் குமாரா வாவா
குருமலையில் மேவுகுருநாதா வாவா
இளம்பரிதி வடிவான யிறைவா வாவா
இதுசமய மெனைக்காக்க இரங்கி நீ வாவா
குன்றுதோறாடுகின்ற குகனே வாவா
குழந்தைவடிவேல சிவக்கொழுந்தே வாவா
நடனமயில் வாகனா யென்னாதா வாவா
நல்லமறையோர் நினைவில் நவில வாவா
என்னுயிருக் குயிரான யிறைவா வாவா
இருநிதியும் தந்தருள எழுந்து வாவா
அசுரர்குடிகெடுத்த ஆறுமுகனே வாவா
அடிமைக்கு வந்தருள் அய்யா வாவா
கதிர்வேலா கந்த சிவற்கருள வாவா
கன்னி தெய்வானையுடன் கலந்து நீ வாவா
கொள்ளிவாய் பேயோட குகனே வாவா
குறளிதுஷ்ட தேவதை களோட வாவா
அருணகிரி-மேவுகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத் தய்யா வாவா

செந்தமிழா லுனைத்துதித்தேன் சிவனே வாவா
திருமுகங்களா றுடனே கசழிக்க வாவா
என்னரசே யென்னுயிரே இப்ப வாவா
எனையீள்ற என்குருவே இரங்கி வாவா
வன்கொடுமை நீக்கிவைத்த வாள்வே வாவா
வசுரர்களின் கருவருந்த அய்யா வாவா

அருள்வெளியி லாடுகின்ற அரசே வாவா
அழியாத பெருஞ்செல்வம் மளிக்க வாவா
வெள்ளமணி சடையோடேவெளியே வாவா
வேதனையை நீக்கவந்த விமலா வாவா
அன்றுயென்னை அடிமைகொண்ட அரனே வாவா
ஆரூரன் தன்குமரா அய்யா வாவா
இன்றுஉன்னையான் பணிந்தேனிரங்கி வாவா
இருள்மாய்கை யொழிந்திட என்குருவே வாவா
அப்பா நின்பொன்னடியை அருள வாவா
ஆதரிப்பாரொருவரில்லை அரசே வாவா
தார்கொண்ட பன்னிருதோள் தாவே வாவா
தய்யல்குறமாதுடனே சல்தி வாவா
கரும்பேனற் கற்கண்டே கந்தா வாவா
கருணைபொழி கதிரேசா கடுசில் வாவா
அருணகிரி மேவுகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத் தய்யா வாவா

பொய்யனேன் பிழைகளையும் பொருத்து வாவா
பொருளுடையோர் தன்பிரகே போகேன் வாவா
பரம்பொருளே பரமே நற்பதனே வாவா
பரம்புகழும் பரஞ்சுடரே பரனே வாவா
அம்பாதிகம்பர அரூபா வாவா
ஆருயிரே அரும்பொருளே அய்யா வாவா
உம்பருக்கு மெட்டாத என்னுயிரே வாவா
ஓம் நமசிவாய குரு உருவா வாவா
சிவந்த பதம் தந்தருளும் சிவனே வாவா
திருவேரகத் தமர்ந்த செல்வா வாவா

கருணைபொழி ஆனந்தக்கடலே வாவா
கல்வியுஞ் சாகா கல்வியருள வாவா
அருட்பெருகுஞ் சோதிசிவ அய்யா வாவா
அரும்பொருளே ஆனந்த அருளே வாவா
பரமரகசியம் பகர்ந்த பரமே வாவா
பன்னிருகையுடைய பரஞ்சுடரே வாவா
சக்திசிவமாகிய சண்முகனே வாவா
சந்திர ஜடாதர தற்பரனே வாவா
ஆரணமும் தேடரிய அண்ணா வாவா
ஆறெழுத்துக் குள்ளிருந்த அய்யா வாவா
அருணகிரி மேவுகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத் தய்யா வாவா

179835

அரகரா ஆறுமுகத்தையா வாவா
அபிஷேக சாமான்க ளன்பாய் வாவா
அன்புடனே வந்திருக்கு அய்யா வாவா
பால்பழங்கள் பன்னீருமிருக்குதய்யா வாவா
பண்புடனே இளநீர் வந்திருக்குதய்யா வாவா
சர்வபொருளறிந்த மறையோர்கள் வாவா
சகஸ்திர நாமங்களது சாற்ற வாவா
வேதியர்கள் திருக்கூட்டம்காண வாவா
வீதியினில் வேத முழங்கிடவே வாவா
கோதில்லா குமர குருபரனே வாவா
குருநமவாய குரு சுவாமி வாவா
கேடுகின்ற மெய்ப்பொருளே சிவனே வாவா
சிவசிவமே சின்மய தேசிகனே வாவா

காணிக்கையோடு வெகுபேர்கள் வாவா
காத்திருக்கிறார்கள் சுவாமிமலை அய்யா வாவா
கோலமயில் காவடிகள் கோடி வாவா
கொண்டுவந்து நின்றிருக்கிறார்கள் கொலுவில் வாவா
மூலக்கணபதிக் கிளையமுருகா வாவா
முப்பொருளுமான சிவகுருவே வாவா
தென்பொதிகை அகஸ்தியரும் பணிய வாவா
சிவசிவா தேவர் சேனாபதியே வாவா
அருணகிரி மேவுகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத்தய்யா வாவா

சுப்பையா சுவாமிமலை நாதா வாவா
துதித்திடுமுன்னடியாரைக்காண வாவா
பழநியப்பா யெங்களைக்காப்பாற்ற வாமா
பன்னிருகையாண்டி யிங்குபரிவாய் வாவா
மாணிக்க விளக்கொளியே மணியே வாவா
மறையவர்கள் போற்றுதிருமருகா வாவா
பரம்பொருளே பரஞ்சுடரே பணிவேன் வாவா
பார்வதியின் புத்திரனே பண்பாய் வாவா
பொன்னடியை வேண்டுகிறேன் புனிதா வாவா
பொன்னுடைய அம்பலவன் புதல்வா வாவா
துரியமலை மேலிருந்தசுவாமி வாவா
துய்யபரநா தசிவ துணையே வாவா
தொண்டர்களை காத்தயெங்கள் துறையே வாவா
தோகைவள்ளி நாயகனே துணைவா வாவா
அருள்வடிவாய் நின்றசிவ அய்யா வாவா
அற்புதனே ஆனந்த பொருளே வாவா
மாலயனும் தேடுகின்ற மருந்தே வாவா
ஆதியந்த மொன்றில்லா அருளே வாவா

அம்பலத்தி லாடிநின்றோன் மகனே வாவா
அருணகிரி மேவுகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத் தய்யா வாவா

சத்துரு சங்காரவடி வேலா வாவா
சர்வமய சங்கரனின் மகனே வாவா
சூரபத்மன் தலைதுணித்த துரையே வாவா
சூலமோடு வேலெடுத்த துரையே வாவா
கலியுகத்தில் கண்கண்ட கந்தா வாவா
கார்த்திகையில் கருணையுடன் காக்க வாவா
மயிலேறி விளையாடு மணியே வாவா
மதியணிந்தோன் மைந்தமுரு கய்யா வாவா
உனைப்பணிந்தேன் சுப்ரமண்யா உண்மை வாவா
ஒருவர்துணை இல்லைமுரு கையா வாவா
சித்திரைப் பருவத்தே சிகனே வாவா
சிறுபுலித்தோ லணிந்தவனின் செல்வா வாவா
அக்கினியின் மலையிருந்து அருள வாவா
ஆதியாய் நின்றசிவ அருளே வாவா
பங்குனிஉத் திரமதிலே பணிய வாவா
பாதமலர் போற்றிடுவேன் பரனே வாவா
சரவண பவானந்த சாமி வாவா
சற்குருவே சாமிமலை நாதா வாவா
முத்தகர்புகழ் மெஞ்ஞான மூர்த்தி வாவா
முருகய்யா முதற்பொருளே முன்னே வாவா
அருணகிரிவாகின்ற அரனே வாவா
அரகரா ஆறுமுகத்தய்யா வாவா
ஆனந்த வாசி மயிலேறி வாவா
அறுமுகனே அமரர்தொழும் பாதா வாவா
மோனகுருவானபரமூர்த்தி வாவா

முச்சுடரு மானசிவ குருவே	வாவா
அஞ்சிநிற்குமடியேனைக் காக்க	வாவா
அம்புவியில் ஒருவர் துணை இல்லை	வாதா
வடிவேலா மெஞ்ஞன குருவே	வாவா
வல்விடும்ப தேசிகனும் வருத்த	வாவா
பாம்பின்வாய் தேரையைப்போலானேன்	வாவா
பதைபதைத்து வாடுகிறேன் பரிவாய்	வாவா
முக்கண்ணனார் புத்திரனே முன்னே	வாவா
முருகா சரவணபவனே முதலே	வாவா
அடியார்கள் துயர்தீர்த்த அய்யா	வாவா
அனுதினமும் பணிவேனறுமுகனே	வாவா
மனந்தளர்ந்து மயங்குகின்றேன் மணியே	வாவா
மானீன்றவள்ளியுடன் மகிழ்ந்து	வாவா
அருணகிரி மேவுகின்ற அரனே	வாவா
அரகரா ஆறுமுகத்தய்யா	வாவா

முற்றிற்று.

விளம்பரம்.

ஹரிபஜனை.

இவ்வுலகின்கண் வித்துவ சிரோண்மணிகள் பலருமியற்றிய பற்பல கீர்த்தனைகளை வாங்கி வாசித்தும், படித்துமிருப்பீர்கள். இது, தென்னிந்திய நாடக உபாத்தியாயர் ஸ்ரீ N. வீராசாமி நாயுடு அவர்கள் இயற்றியது. பாரிஸ், இந்துஸ்தான், காவடிச்சிந்து, திருப்புகழ் முதலிய வர்ணமெட்டுகளும், ஸ்ரீ இராமாயண நொண்டிச்சிந்தும், இன்னும் டிராமாவில் பாடிவருகிற பற்பல நூதன வர்ணமெட்டுகளுடன் அடங்கியுள்ள ஹரிபஜனை கீர்த்தனை. இப்புஸ்தகத்தை பஜனைகோஷ்டி பாகவதர்களும், டிராமா ஆக்டர்களும் ஒவ்வொருவரும் கட்டாயம் வாங்கி வாசிக்க முக்கியமானவை. இதன் விலை சொற்பம்தான்.

இதன் விலை அணா 0—4—0

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

வேதாந்த சாரம்.

பாஷியகாரர்களால் இயற்றியது.

இது வைஷ்ணவசித்தாந்திகளுக்கு மிக அருமையான நூல். இதை ஒவ்வொருவர்களும் வாங்கி இதன் சாரங்களையறியவேண்டியது முக்கியம்.

இதன் விலை அணா 0—8—0

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

R. கோவிந்தஸாமி நாயுடு.

புஸ்தக வியாபாரம்.

பெரியகடைத்தெரு,

கும்பகோணம்.